DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special. Sessions Case No. 5/2025**

**Deposition of Witness for Prosecution : P.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்தி | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | மதி |
| ஊர் | : | தஞ்சாவூர் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| ஜாதி | : | -- | வயது | : | 19 |
| மதம் | : | -- | தொழில் | : | கம்பி பிட்டர் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 05.08.2026

**எதிரிகள் ஆஜர் இல்லை. மனு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். கம்பி பிட்டராக வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி வினோத்யை எனக்கு தெரியாது. அ.சா.1 சதிஷ்குமார், அ.சா.2 அஞ்சலை, அ.சா.3 சுரேந்திரன், அ.சா.4 பூமணி ஆகியோர்களை எனக்கு தெரியாது. அ.சா.9 ராஜேஷ்யை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்( சாட்சியிடம் பார்வை மகஜர் காட்டப்பட்டது) அதில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது. அது **அ.சா.ஆ.2/அ.சா.10** ஆக குறியிடப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்( சாட்சியிடம் கைப்பற்றுதல் மகஜர் காட்டப்பட்டது) அதில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது. அது

**அ.சா.ஆ.3/அ.சா.10** ஆக குறியிடப்பட்டது. கல்லால் அடித்து விட்டார்கள் என்று கல்லை போலீஸார் எடுத்து காட்டினார்கள். சம்பவம் நடந்த இடத்தில் போலீஸார் வந்து கல்லை எடுத்து காட்டிவிட்டு கையெழுத்து வாங்கிவிட்டார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. நான் கையெழுத்து போட்ட தாளில் எந்த போலீஸாரால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. எந்த வருடம் எந்த மாதம் என்றால் சென்ற வருடம் மே மாதம், தேதி சரியாக தெரியவில்லை. என்னை போலீஸார் விசாரிக்கவில்லை. நான் இந்த இரண்டு கையெழுத்துகளையும் வெளிபாளையம் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒப்பம்/-சக்தி

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.